நல்ல காரியங்கள் நடக்க வேண்டும், நம் சொத்து அதற்குப் பயன்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தினால் கொடுத்திருப்பார்களே ஒழிய, இடையிலே, என்ன பரம்பரையிலே, என்ன ஜாதியிலே வந்தார் என்று தெரியாதவர்கள் கூட, ஐயாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்தை எண்ணூறு ரூபாய்க்கு எப்பம் விட செத்தவன் சொத்தை வைத்துவிட்டு சாகவில்லை. எவ்வளவோ கஷ்டப்பட்டு சேர்த்த சொத்தை நல்ல எண்ணத்துடன் ஆண்டவனை நம்பி எழுதி வைத்ததை இப்படி இடையிலே பறித்துக்கொண்டு போகும் அளவிலே சட்டம் இருக்குமானால், அந்தச் சட்டத்தை இந்தச் சொத்தைப் பொறுத்தவரையில் நிறுத்திவிட வேண்டும். கோயில் சொத்தைப் பொறுத்த மட்டில் ஸிடி டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் சட்டம் கட்டுப்படுத்தாமல் அந்தச் சொத்தை நேரடியாக ஏலம் போட்டு, யார் அதற்கு அதிக விலை கேட்கிறார்களோ அவர்களுக்கு அந்தச் சொத்தை விற்கும்படியான நிலை ஏற்பட வேண்டும். அப்படிச் செய்தால், ஆண்டவன் மேல் ஆசை இருக்கிறவர்கள், அதிக விலை கொடுத்துக் கூட வாங்கலாம்; அத்தகைய சூழ்நிலையைக் கொண்டுவர வேண்டுமேயொழிய, ரூபாய் 800-க்கும், ரூபாய் 600-க்கும் ஐயாயிரம் ரூபாய் பெறுமான சொத்தை விற்றுத் தா என்று சொன்னால், அது நியாய விரோதமானது, ஹிந்து மதத்திற்கே மாபெரும் தவறை இழைக்கக் கூடியது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இதைச் சிந்தித்துப் பார்த்து, கோயில் சொத்தைப் பொறுத்தவரையில், ஸிடி டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் சட்டம் கட்டுப்படுத்தக்கூடாதென்று செய்துவிட்டால், அதுவே நாம் ஆண்டவனுக்குச் சேவை செய்ததற்கு ஒரு அறிகுறியாக இருக்கும். அதிலே கனம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றப்படி திருத்தங்கள் வரும்போது மிகுதிக் கருத்துக்களையும் பேசிக்கொள்ளலாம் என்று கருதி என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

1-25 p.m. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules and Orders.

90 *Amendment to Notification S.R.O. No. 1-1777 of* 1959, *dated* 13*th March* 1959 *under the Madras Prohibition Act,* 1937, *issued in G.O. Ms. No.* 2249, *Home, dated* 6*th August* 1959. [*Laid on the table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act,* 1937 (*Madras Act X of* 1937).]

B.—Reports, Notifications and other papers.

50 *Notification issued with G.O. Ms. No.* 2059, *Home, dated* 21*st July* 1959, *under the Madras Motor Vehicles Taxation Act,* 1931. [*Laid on the table of the House under sub-section* (1) *of section* 11 *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

51 *Notification issued with G.O. Ms. No.* 1884, *Home, dated* 22*nd February* 1959 *under the Madras Motor Vehicles Taxation Act,* 1931. [*Laid on the table of the House under sub-section* (1) *of section* 11 *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]